DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.163/20

Deposition of Witness: PW 2

| | |
|---|---|
| Name ரதி | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.09.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் நரிகுறவர் காலணியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். 2 வருடத்திற்கு முன்பு எனது அப்பா காய்கறி, அரிசி வாங்குவதற்காக அல்லிநகரம் சென்றுவிட்டு திரும்பு வரும் போது பெட்ரோல் பங்கிலிருந்து திரும்பு உள்ளே வரும் போது வெள்ளைகலர் வண்டி என்று சொன்னார்கள். அது வந்து என் அப்பா மீது இடித்து அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். அவரது உடலை ஆம்புலன்ஸில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அதற்கு போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

விபத்து குறித்து எனக்கு நேரடியாக விபரம் தெரியாது என்றால் சரிதான். நான் கேள்விபட்டதை வைத்து தான் முதல்விசாரணையில் கூறியுள்ள விபரங்களை வைத்து கூறுகிறேன் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் பழைய இரும்பு கடை உள்ளது என்றால் சரிதான். என் அப்பா ஊசி, பாசி விற்கும் தொழில் பார்த்து வந்தார். என் அப்பாவிற்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் எப்போதாவது தான் அருந்துவார். பழைய இரும்பு கடைக்கு எதிர்த்தார் போல் 100 அடி தூரத்தில் ஒயின்சாப் உள்ளது என்றால்சரிதான். சம்பவம் நடந்த சமயம் நல்ல இருட்டு என்றால் சரிதான். பெரியகுளம் நிறைய வாகனங்கள் செல்லும் ரோடு என்றால் சரிதான். சம்பவதன்று என் அப்பா மது அருந்திவிட்டு ரோட்டில் வந்தார் என்றால் சரியல்ல. ரோட்டில் பாதசாரிகள் எந்த இடத்தில் கடப்பார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. சம்பவ இடத்திற்கு அருகில் பாதசாரிகள் ரோட்டை கடப்பதற்கு வழியில்லை என்றால் அது எனக்கு தெரியாது. என் அப்பாவின் இறப்பிற்கு இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.